# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்
## அசல் வழக்கு எண்.113/2016

2022-ஆம் ஆண்டு செப்டம்பர் 23-ஆம் நாள் வெள்ளிக்கிழமை வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ஆம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.ஜெ.நாகலட்சுமி (எ) விஜயராணி, பி.ஏ.,பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | சக்திவேல் | தொழில் | - | |
| த.க.பெ. | - | | ஊர் | - | |
| வயது | - | | தாலுாக்கா | - | |
| மதம் | - | | மாவட்டம் | - | |

**23.09.2022. வா சா 1 -**

**2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் இந்த வழக்கில் 2-ம் வாதி என்றால் சரிதான். இறந்து போன தெய்வசிகாமணி கவுண்டரின் வாரிசு சான்று கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தெய்வசிகாமணி கவுண்டரின் தாயார் பெயர் பருவதம்மாள். பருவதம்மாளின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பருவதம்மாளின் இறப்பு சான்றிதழை தாக்கல் செய்துள்ளேன். பருவதம்மாளின் வாரிசு சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் ஞானசௌந்தரி என்பவரை 1-ம் பிரதிவாதியாக சேர்த்துஉள்ளேன் என்றால் சரிதான். ஞானசௌந்தரி தெய்வசிகாமணியின் மனைவியா என்றால் ? இல்லை . 1-வது வாதியான பாக்கியம் தெய்வசிகாமணி கவுண்டரின் மனைவியாவார்.

நான் காங்கயம் வட்டாட்சியரிடம் வாரிசு சான்று வேண்டி விண்ணப்பித்தபோது பருவதம்மாளின் இறப்பு குறித்து ஆவணங்களை தாக்ல செய்யவில்லை என்றால் சரிதான். எனது மனுவானது

தெய்வசிகாமணி கவுண்டருக்கு இரண்டு மனைவிகள் என்பதால் நீதிமன்றத்தின் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு மனு திருப்பப்பட்டது என்றால் சரிதான்.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு,சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

/ஒம்/ திருமதி.ஜெ.நாகலட்சுமி (எ) விஜயராணி, பி.ஏ., பி.எல்..
மாவட்ட உரிமையியல் நீதிபதி,காங்கயம்.